# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 28.08.2025 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பொது பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவின் மூலம் ஒப்பந்ததாரர் மற்றும் விநியோகஸ்தர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி சேவை வரி ஆகியவற்றினை சம்மந்தப்பட்ட அரசு துறைகளுக்கு 2024–2025 ஆம் நிதியாண்டிற்கு தாக்கல் செய்தமைக்கு திரு, எம். சக்திவேல் அட்வகேட் மற்றும் வரி ஆலோசகர் அவர்கள் ரூ.55200/– க்கான பட்டியல் சமர்பித்துள்ளார் எனவே மேற்காண்தொகை ரூ, 55200/– திரு,எம்.சக்திவேல் அட்வகேட் வரி ஆலோசகர் கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

   **அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

   **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது தீர்மான எண். 1304**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 19.08.2025 ஆம் தேதியன்று மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

   1 தினசரி சந்தை IUDM கடை எண். A.01, A.03, A.16, A.23. G.1 மற்றும் கடை எண். G.2 (6 கடைகள்)

   மேற்படி 6 கடைகளுக்கு நடைபெற்ற மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. ஒரே ஒரு கடைக்கு மட்டும் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ.எ ண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.03** | திருமதி.சாரதா க/பெ ராமசாமி,43,44,45 புதுசாமி கோவில் வீதி கோபிசெட்டிபாளையம் | **ரூ.15,200/–** |
| | | திரு,ஆர், நவீன்குமார் த/பெ ராஜேந்திரகுமார் பெரியண்ணன் வீதி மொடச்சூர்,கோபிசெட்டிபாளையம் | **ரூ.15,100/–** |

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.03 க்கு, திரு, ஆர், நவீன்குமார் என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,100/– ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து திருமதி.சாரதா என்பவர் ரூ.15,200/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார்,

உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 20,07.2025 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண். A03 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,200/– குறிப்பிட்டுள்ள திருமதி.சாரதா என்பவருக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பின்படி, தினசரி சந்தை IUDM கடை எண். A.03கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.15200/– குறிப்பிட்டுள்ள திருமதி.சாரதா என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள ஐந்து கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது தீர்மான எண். 1305**

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம் 01.12.2022 முதல் 30.11.2025

வரை மூன்று ஆண்டுகளுக்கு திரு.ஜி.எஸ்.ஷேக் அலாவுதுன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது, மேற்படி குத்தகை உரிம காலம் 30.11.2025 உடன் முடிவடைவதால் ஒப்படைக்கு நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது(ந.க.எண். 2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது தீர்மான எண். 1306**

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு 19.08.2025 அன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் நடைபெற்றது, மேற்படி கடைகளுக்கு நடைபெற்ற பொது (ம) மறு ஏலத்தில் கலந்து கொள்ள யாரும் முன்வரவில்லை, வாரசந்தை கடை எண் 26 ற்கு இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டனர். அதன் விபரம் பின்வருமாறு:

| வ.எண். | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி/ ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | வாரசந்தை கடை எண் 26 | திரு. எம்.பி, சண்முகசுந்தரம் த/பெ பழனிச்சாமி 8, மேற்கு தேர் வீதி கோபிசெட்டிபாளையம் | 6000/ |
| | | திரு, ஆர்.பாஸ்கர் 8, வேலுமணி நகர் கோபிசெட்டிபாளையம் | 5850./ |

மேற்கண்ட விபரங்களின்படி

வரிசை எண் 1 ல் கண்டுள்ள வாரசந்தை கடை எண் 26 ற்கு திரு, ஆர்.பாஸ்கர் என்பவர் கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,5850/- விட கூடுதலாக ரூ 150/- சேர்த்து திரு. எம்.பி, சண்முகசுந்தரம் என்பவர் ரூ 6000./க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரியுள்ளார்.

உதவி வருவாய் அலுவலர் (பொ) அவர்கள் தனது 20.08.2025 ஆம் தேதிய குறிப்பில், வாரசந்தை கடை எண் 26 ற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, 6000./கோரியுள்ள திரு. எம்.பி, சண்முகசுந்தரம் என்பவருக்கும் மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே உதவி வருவாய் அலுவலர் (பொ) அவர்கள் குறிப்பின்படி, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு, எம்.பி, சண்முகசுந்தரம் என்வருக்கும் வாரசந்தை கடை எண் 26 யை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது தீர்மான எண். 1307**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் செய்த பணிகளின் விவரத்தினை (2021-2022) Malar Publications Ltd செய்திதாளில் 04.09.2024 ஆம் தேதி வெளியிடப்பட்டது.

இச்செய்தியினை Malar Publications Ltd செய்திதாளில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ9,995/-க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை Malar Publications Ltd அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து
மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2அனுமதிக்கப்பட்டது தீர்மான எண். 1308**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 16.07.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 1 நாகமலை எக்ஸ்டன்சன் அருகில் கணபதி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | –0.04% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.65% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 3 செல்லம்மாள் நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | –0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 2.05% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 4 பாட்டப்பன் வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | –0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 2.05% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 5 வாசு லே அவுட் 2வது வீதியில் | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | –0.13% சதவீதம் மதிப்பீட்டு விலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | மழைநீர் வடிகால் மற்று சிறுபாலம் அமைக்கும் பணி | | | விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 2.67% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 6 ராமர் எக்ஸ்டன்சன் 2 வது வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | 0.00% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 2.06% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 6 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 7 கருமாயா வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும்ப ணி | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | −0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 2.05% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 7 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 8 வாய்க்கால் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | −0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 2.05% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 8 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 9 J S நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | −0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.51% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விட அதிகம் |
| 9 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 10 ARS நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | –0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.51% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 10 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 11 திருமால் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | –0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.52% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 11 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 12 பாரதி வீதியில் சிறுபாலம் மற்றும் ஸ்ரீ நகர் பகுதியில் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்தல் பணி | 2,00,000 | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | –0.12% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | 1.21% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 12 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 13 வாய்க்கால் மெயின் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | –0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.51% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 13 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 14கிருஷ்ணா | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | –0.06% சதவீதம் மதிப்பீட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | | | விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.70% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 14 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 15 யாகூப் வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 2,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | −0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.68% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 15 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 16 முத்துஷா வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | −0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.54% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 16 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 17 பஜனை கோவில் வீதியில் கான்கீரிட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | −0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 17 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 18 குமரப்பா வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | −0.02% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | 2.10% சதவீதம் மதிப்பீட்டு விலை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விகிதத்தை விட அதிகம் |
| 18 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 19 குப்பாண்டவர் வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.எஸ்.லோகநாதன் ஒப்பந்ததாரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | 2.09% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 19 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 20 PMK ரைஸ் மில் ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.குழந்தைவேல் ஒப்பந்ததராரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததராரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 20 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 21 மணி மேகலை வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.குழந்தைவேல் ஒப்பந்ததராரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததராரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 21 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 22 முத்துஷா வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.குழந்தைவேல் ஒப்பந்ததராரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததராரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 22 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 23 நஞ்சப்பா வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | வி.தங்கராஜ் ஒப்பந்ததராரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விலை விகிதத்தை விட அதிகம் |
| 23 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 25 திரு.வி.க. வீதியில் தார் தளம் அமைத்து சிறுபாலம் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.குழந்தைவேல் ஒப்பந்ததராரர் | −0.08% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.79% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 24 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 26 சிவசண்முகம் வீதியில் கான்கீரிட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.கே.குழந்தைவேல் ஒப்பந்ததராரர் | −0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 1.52% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 25 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 27 ஜெய் துர்க்கை நகர் 2 வது குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | −0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 26 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 28 காட்டு வளவு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | −0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 27 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 29 மாரியம்மன் கோவில் வீதியில் மழைநீர் | 3,00,000 | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | −0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வடிகால் அமைக்கும் பணி | | | விட குறைவு |
| | | | திரு.கே.ஆர் ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.55% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 28 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 30 செங்கோட்டையன் காலனி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.பி.கந்தசாமி ஒப்பந்ததாரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | 1.72% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 29 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தான வார்டு எண் 24 பெரியார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 3,00,000 | திரு.பி.கந்தசாமி ஒப்பந்ததாரர் | –0.01% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s D.N Consstruction ஒப்பந்ததாரர் | 1.72% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளில் வ.எண் 1 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி. தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. மேற்படி பணிகளில் வ.எண் 2 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/sD N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
4. மேற்படி பணிகளில் வ.எண் 3 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/sD N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
5. மேற்படி பணிகளில் வ.எண் 4 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/sD N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
6. மேற்படி பணிகளில் வ.எண் 5 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/sD N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
7. மேற்படி பணிகளில் வ.எண் 6 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/sD N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
8. மேற்படி பணிகளில் வ.எண் 7 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/sD N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
9. மேற்படி பணிகளில் வ.எண் 8 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை

விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

10. மேற்படி பணிகளில் வ.எண் 9 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
11. மேற்படி பணிகளில் வ.எண் 10 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
12. மேற்படி பணிகளில் வ.எண் 11 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s D N Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
13. மேற்படி பணிகளில் வ.எண் 12 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
14. மேற்படி பணிகளில் வ.எண் 13 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
15. மேற்படி பணிகளில் வ.எண் 14 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
16. மேற்படி பணிகளில் வ.எண் 15 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.ஆர்.ஆறுமுகம்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
17. மேற்படி பணிகளில் வ.எண் 16 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.எஸ். லோகநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்
18. மேற்படி பணிகளில் வ.எண் 17 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.எஸ். லோகநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
19. மேற்படி பணிகளில் வ.எண் 18 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.எஸ். லோகநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
20. மேற்படி பணிகளில் வ.எண் 19 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.குழந்தைவேல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
21. மேற்படி பணிகளில் வ.எண் 20 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.குழந்தைவேல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
22. மேற்படி பணிகளில் வ.எண் 21 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.குழந்தைவேல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
23. மேற்படி பணிகளில் வ.எண் 22 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.ஆர். ஆறுமுகம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
24. மேற்படி பணிகளில் வ.எண் 23 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.குழந்தைவேல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
25. மேற்படி பணிகளில் வ.எண் 24 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.குழந்தைவேல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
26. மேற்படி பணிகளில் வ.எண் 25 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
27. மேற்படி பணிகளில் வ.எண் 26 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.வி,தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
28. மேற்படி பணிகளில் வ.எண் 27 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை

விகிதம் அளித்துள்ள திரு.வி.தங்கராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

29. மேற்படி பணிகளில் வ.எண் 28 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.பி.கந்தசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

30. மேற்படி பணிகளில் வ.எண் 29 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.பி.கந்தசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

மேற்படி பணி திட்டப்பணி என்பதால், பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது 2 முதல் 30 வரை ஏற்க்கப்பட்டது தீர்மான எண்.1309**

7. இந்நகராட்சி வளாகத்தில் ஆகஸ்டு 15 79 வது இந்திய சுகந்திர தினம் கொண்டப்பபட்ட வகையில் நகராட்சி வளாகத்திற்கு அலங்கார மின் விளக்குகள் மூன்று நாட்களுக்கு அமைக்கப்பட்டதற்கு மற்றும் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டதற்கு வாடகை ரூ. 25,000/– நந்தினி ஆடியோஸ் அவர்களுக்கு வழங்கவும் மற்றும் மேடை, சாமியான பந்தல் அமைக்கப்பட்டதற்கு வாடகை ரூ 25,000/– நீல்ராஜ் பந்தல் அமைப்பாளர் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு** :–1. . மன்றம் அனுமதிக்கலாம்

2..பொ து நிதியில் செலவினத்தை மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2.அனுமதிக்கப்பட்டது 2 தீர்மான எண்.1310**

8. இந்நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட் பகுதிகள் , மெயின் ரோடுகளில் உள்ள தெருக்களை சுத்தம் செய்து குப்பையை அகற்ற நமது நகராட்சி பராமரிப்பின் கீழ் மூன்று பேட்டரி வாகனங்களை கொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அவ்வாகனங்களின் 3 பேட்டரிகள் காலவாதியாகிவிட்டதால் அப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி புதியதாக 3 பேட்டரிகளை கொள்முதல் செய்து பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1311**

9. இந்நகராட்சியின் மூலம் தெருநாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் பணி (ABC Programme) க்கு அறுவை அரங்கம், நாய்கள் அறை மற்றும் மருத்துவர் அறை தயார் நிலையில் உள்ளதால் இப்பணியினை விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தை தேர்வு செய்து நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் 300 தெருநாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்து Rabies தடுப்பூசி போடும் பணிக்கு அரசு நிர்ணயம் செய்த விலை விகிதமான நாய் ஒன்றுக்கு ரூ.1650/– ரேட்டில் பணியினை மேற்கொள்ளவும் இப்பணிக்கு ஆகும் உத்தேசசெலவினம் தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு நகராட்சி மூலம் உரிமம் பெறப்பட வேண்டும். ஒரு நாய்க்கு ரூ. 250/– நிர்ணயம் செய்து நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2177/2023/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. ABC பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க

மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1312**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் எதிர்வரும் மழை காலத்திற்கு கொசுவினால் பரவும் டெங்கு உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்த முதிர் கொசுக்களை அழிக்கும் பணிக்கு புகை மருந்தாக பயன்படுத்தப்படும் Pyrethrum 2% Extract மருந்துகளை ரூ.1.00 இலட்சத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண். 1300 நாள் . 31.07.2025 இல் மன்ற ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்நிலையில்

தற்பொழுது மருந்துகள் இருப்பில் இல்லாததால் கொள்முதல் செய்து இருப்பு வைத்து நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு நடைமுறைப்படுத்த வேண்டி உள்ளது. எனவே அரசு கூட்டுறவு நிறுவனமான M/s. Tamil Nadu Medical Service Corporation, Ltd, Chennai அவர்களிடம் Pyrethrum2% Extract மருந்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.1000 விலைவிகிதத்தில் நேரிடையாக ரூ.1.00/- இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( **ந.க.எண். 959/2024/எச் 1)**

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1313**

11. தற்போது நகராட்சியில் DMA/ DISTRICT COLLECTOR/RDMA மற்றும் புதிய பயிற்சிகள் அனைத்தும் காணொலி காட்சி வாயிலாக (VIDEO CONFERENCE)வாயிலாக நடைபெறுகிறது.எனவே, நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் VC-ல் பங்கேற்ப ஏதுவாக ALL IN ONE DESKTOP COMPUTER வாங்க வேண்டி உள்ளது . மேற்படி, பிரிவு தலைமை அலுவலர்களுக்கு 6 NOS, ALL IN ONE DESKTOP COMPUTER-யை GOVERNMENT OF INDIA வின், Government e Marketplace (GeM) விலை விகிதத்தில் வாங்கி கொள்ளலாம். மேற்படி, கணினிகளை GeM PORTAL (Govenmeent of India )ல் பதிவு செய்துள்ள M/S. SYSCON SYSTEMS - GeM Seller Id: 9QUD210004019979 அவர்களிடன் வாங்கி கொள்ளலாம்.(GeM விலை விகிதம் , Seller Profile நகல்கள் இணைப்பு ) (76000 * 6 = 456000.00) இதற்கு ஆகும் செலவினம் ரூ. 4,56,000.00 (Rupees Four Lakhs Fifty Six Thousand Only) (INCLUDING ALL TAXES) ) . (ந.கஎண். 2130/இ1/2025)

**அலுவலகக் குறிப்பு :- 1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி, செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1314**

12. நகராட்சி அலுவலகத்திற்கு COMPUTER, மற்றும் PRINTER -களை GOVERNMENT OF INDIA வின் , Government e Marketplace (GeM) விலை விகிதத்தில் வாங்கி கொள்ளலாம். மேற்படி, கணினிகளை GeM PORTAL ல் பதிவு செய்துள்ள M/S. SYSCON SYSTEMS - GeM Seller Id: 9QUD210004019979 அவர்களிடன் வாங்கி கொள்ளலாம்.(GeM விலை விகிதம் , Seller Profile நகல்கள் இணைப்பு )
இதற்கு ஆகும் செலவினம் ரூ. 8,94,846.00 (Rupees Eight Lakhs Ninety Four Thousand Eight Hundred and fourty six only) (Including all tax) (ந.க.எண். 2117/இ1/2025)

**அலுவலகக் குறிப்பு :-1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி, செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**அலுவலகக் குறிப்பு . 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1315**

13. நகராட்சி பொறியியர் பிரிவிற்கு LAPTOP மற்றும் LASER PRINTER வாங்க மன்றத் தீர்மான எண் 1166 நாள் 15.05.2025 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி, LAPTOP மற்றும் PRINTER -களை GOVERNMENT OF INDIA வின் ,Government e Marketplace (GeM) விலை விகிதத்தில் வாங்கி கொள்ளலாம். மேற்படி, கணினிகளை GeM PORTAL ல் பதிவு செய்துள்ள M/S. SYSCON SYSTEMS - GeM Seller Id: 9QUD210004019979 அவர்களிடன் வாங்கி கொள்ளலாம்.(GeM விலை விகிதம் , Seller Profile நகல்கள் இணைப்பு ) இதற்கு ஆகும் செலவினம் ரூ. 1,19,486.00 ( Rupees One Lakh Nineteen Thousand Four Hundred and Eighty Six Only) (INCLUDING ALL TAXES) ).

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம

**அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1316**

**14.** தற்போது நகராட்சிக்கு நாற்காலிகள், மேஜைகள், கம்பியூட்டர் டேபில், இரும்பு கப்போர்டு (Steel cupboard) ஆகியவை தேவைப்படுகிறது. தற்போது புதியதாக 8

நகராட்சி பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால் புதிய மேஜைகள், நாற்காலிகள் மற்றும் இரும்பு கப்போர்டுகள் தேவைப்படுகிறது. மேற்படி அறைகலன்களை – Furnitures களை தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (டான்சி) TANSI, நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளலாம். TANSI நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளன (Quotation cum proforma invoice )

| | | |
|---|---|---|
| 1 | S type chair | 5 nos |
| 2 | S type visitor chair | 5 nos |
| 3 | Computer table | 2 nos |
| 4 | Steel plain cupboard | 3 nos |
| 5 | Side rack open | 2 nos |

இதற்கு ஆகும் செலவினம் ரூ. 1,52,757.00 ( Rupees One Lakh fIfty two Thousand seven Hundred and fifty seven Only) (INCLUDING ALL TAXES) ).

**அலுவலகக் குறிப்பு :– 1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி, செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1317**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 14.08.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் –13இல் உள்ள தினசரி சந்தை வளாகத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்கும் கழிப்பிட வசதி மற்றும் Septic tank அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 20,00,000 | UNITED ENGINEERS ஒப்பந்ததாரர் | 0.09% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | SS PACHAIAMMAN CONSTRUCTION ஒப்பந்ததாரர் | 2.18% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்

. 2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள UNITED ENGINEERS ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 . அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது தீர்மான எண்.1318**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்கமான வார்டு எண் 10 அபிராமி நகர், சக்தி நகர், மின் நகர், ARS நகர் மற்றும் ஆஞ்சநேயா நகர் பகுதிகளில் நமக்கு நாமே திட்டத்தின் NNT (2023–2024)இன் கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.36,00,000/– மதிப்பீட்டில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/S சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் முத்து வேலப்பன் வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 1397/2022/இ1 நாள் 20.06.2024 இல் பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. வேலை உத்திரவு வழங்கி 90 நாட்களுக்கு மேல் ஆகியும் பணியில் போதிய முன்னேற்றம் இல்லாததாலும் , பணியினை செய்யாமல் காலம் தாழ்த்தி வருவதால்

பணியினை 24 மணி நேரத்தில் பணி தொடங்கி விரைவில் முடிக்க கோரி சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களுக்கு 10.03.2025 இல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. ஆனால் பணியினை முடிக்காமல் மேலும் காலம் தாழ்த்தி வருவதால் அரசு நிதி செலவிடப்படாமல் உள்ளது.எனவே, பணியினை விரைவில் முடிக்க கோரி 25.06.2025 இல் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. இரண்டு முறை அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டும் பணியினை முடிக்கப்படவில்லை என்றும், பலமுறை நேரிலும் , தொலைபேசியிலும் அறிவுறுத்தியும் தாங்கள் பணி செய்யாமல் நகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக உள்ளிர்கள் என்று 28.07.2025 இல் இறுதி அறிவுப்பு M/S சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.இவ்வறிவிப்பை பெற்றுக்கொண்டு பணியை விரைந்து முடிக்காமல் தற்பொழுது எனது உடல்நிலை சரியில்லை என்பதால் என்னால் பணியை தொடர்ந்து செய்ய இயலாது என 18.08.2025 இல் தெரிவித்துள்ளார். இப்பணியை பொது மக்கள் பங்களிப்புடன் கூடிய திட்டப்பணியாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து, செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான பட்டியல் தொகை போக மீதமுள்ள தொகை ரூ.20,67,414/-க்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதனால் ஏற்படும் இழப்புத்தொகையை ஒப்பந்ததாரரின் வைப்புத்தொகைகளிலிருந்து பிடித்தம் செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ( ந.கஎண். 1397/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்வதையும் மற்றும் திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி திருத்திய தொழில்நுட்ப அனுமதிபெற்று பணி மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1319**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 24.07.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு உரிய நாற்காலி மின்விளக்குகள், மாற்றுத் திறனாளிகளுக்கு சாய்தளம் மற்றும் இதர அபிவிருத்தி மேற்கொள்ளும் பணி | 2,00,000 | திரு.கே.ஆர். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 0.13% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்கராஜ் ஒப்பந்ததாரர் | 6.86% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.கே.ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 . அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1320**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 14.08.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் -13 இல் உள்ள தினசரி சந்தை வளாகத்தின் கீழ் தளத்தில் வாகனம் நிறுத்துமிடம் உள்ளது. அப்பகுதிக்கு சரிவுப்பாதை அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 32,00,000 | SS PACHAIAMMAN CONSTRUCTION ஒப்பந்ததாரர் | 0.04% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | UNITED ENGINEERS ஒப்பந்ததாரர் | 0.23% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள SS PACHAIAMMAN CONSTRUCTION ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 . அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1321**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 19.08.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் -13 இல் உள்ள தினசரி அங்காடி பணி வளாகத்தில் சரிவுப்பாதை(Ramp)அமைக்கப்பட்டுள்ளது. மேலும் படிகட்டுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 3,00,000 | SPD ENGINEERING ஒப்பந்ததாரர் | 0.10% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.கே.ஆர். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 1.66% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள

SPD ENGINEERING ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 . அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1322**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 24.07.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் –3 ராமர் எக்ஸ்டன்சன் பகுதியில் உள்ள Incinecator க்கு பக்கவாட்டு மறைப்பு (GI Sheet–ல்) பணிகள், கரட்டூர் MCC Sheetக்கு Exhaust Fan அமைத்தல் பணி மற்றும் நகர் நல மையத்திற்கு கழிப்பிட மேம்பாட்டு மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் மேற்க்கொள்ளுதல் | 5,00,000 | திரு.கே.ஆர். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | 0.09% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.தங்க ராஜ் ஒப்பந்ததாரர் | 3.78% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள

திரு.கே.ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை

ஏற்கலாம்

**அலுவலகக் குறிப்பு . 1 . அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1323**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15இல் உள்ள வரதராஜ பெருமாள் கோவில் தேர்வீதி மற்றும் கடை வீதியில் தேர் வலம் வருவதால் , அச்சாலையில் இருக்கும் குழிகளை உடனடியாக சரி செய்ய வேண்டியுள்ளது. இதற்கு கான்கீரிட் கலவை கொண்டு நிரப்ப வேண்டியுள்ளதாலும் , மற்றும் நகராட்சி உரக்கிடங்கில் மின் இணைப்பு பெற கட்டுமான பணிகள் செய்ய வேண்டியுள்ளதாலும் , இதற்கு செலவின தொகை ரூ.70,000/– ஆகும். அச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு . 1 . அனுமதிக்கப்பட்டது 2.ஏற்கப்பட்டது. தீர்மான எண்.1324**

22. தமிழ்நாடு அரசின் அரசாணை (நிலை) எண். 390, நாள். 18.06.2025 இன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களால் தெரிவித்துள்ளதற்கு இனங்க, பொதுமக்களின் கோரிக்கைகளை

அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய மக்களுடன் முதல்வர் என்னும் மாபெரும் திட்டத்தின் விளைவாக "**உங்களுடன் ஸ்டாலின்**" எனும் திட்டத்தினை செயல்படுத்திட, வருவாய் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம். ஊரக வளர்ச்சித்துறை, உள்துறை, பள்ளிக்கல்வித்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, சமூக நலன் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை, மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட துறைகளுடன் இணைந்து நகராட்சி நிர்வாகம் மூலம் 12 முகாம்கள் நடத்தப்படவும்,அம்முகாமில் பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்றிட ஏதுவாக விளம்பரம் செய்யும் வகையில் கைப்பிரதி , பிளக்ஸ் பேனர், ஆட்டோ விளம்பரம் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும், கணினிகள் வைப்பதற்கான டேபிள், சேர், மற்று அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கான டேபிள், சேர் வாடகைக்கு எடுத்துக்கொள்ளவும், பொதுமக்களின் கோரிக்கை விண்ணப்பங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய Fiber net இணைப்பு மற்றும் WiFi மோடத்துடன் BSNL/Airtel/Jio இல் இணைப்பு பெறவும், தடையின்றி மின்சாரம் பெற ஜென்செட் வாடகைக்கு எடுத்துக்கொள்ளவும், மற்றும் இம்முகாமில் கலந்து கொள்ளும் அலுவலர்களுக்கு தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கவும், முகாம் நடைபெறும் இடங்களுக்கான மின் கட்டணம் ஆகிய செலவினங்களுக்கும் பொதுமக்களின் தேவைகளுக்கு சாமியான பந்தல், PEDESDAL FAN மற்றும் குடிநீர் வசதி ஆகியவைகளை மேற்கொள்ளவும் ரூ.6.00இலட்சத்திற்கு பொது நிதியில் மேலும் செலவினங்களை உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று அதன் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1577/2025/எப்1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

. **அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1325**

23. சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம் 2014, பிரிவு 37ன் கீழ் அந்தந்த உள்ளாட்சியே துணை விதிகள் தயார் செய்யப்பட வேண்டும் என உள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.7366/2016/UPA2, நாள்.03.09.2018ஆம் தேதிய கடிதத்தில் துணை விதிகள் தயார் செய்திடவும், அதனை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தயார் செய்யப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கான துணை விதிகள் 2018–யை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தினசரி நாளிதழில் வெளியிடவும் அதனைத் தொடர்ந்து மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய வேண்டிய துணை விதிகள் 2018 மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**கோபிசெட்டிபாளையம் நகராட்சி சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை சட்டம்–2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள்–2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சி சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்–2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

**<u>அத்தியாயம் –1</u>**

**<u>முதனிலை</u>**

1) குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் இந்த துணை விதிகள் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்–2018 என்றழக்கப்படும்)

இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும்

2) பொருள் வரையறுகள் : இந்த துணை விதிகள் உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை

I. "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம்,2014 (மத்திய சட்டம்.7/2014) என்று பொருள்படும்

II. "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்

III. "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) விதிகள் 2015 என்று பொருள்படும்

IV. "திட்டம்" என்பது திட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015 என்று பொருள்படும்

V. "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்,

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளுக்கும் வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம் விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

### விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விகிதம் மற்றும் ஒழுங்குமுறைகள்

3. (1) பாதசாரிகளின் நடமாட்டம் (FOOT FALL) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து கோபிசெட்டிபாளையம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிபார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(I) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில் நிலையான விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(II) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(III) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில் சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(IV)10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில் சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(VI)சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்,

(VII) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(VIII)சாலையோர வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(4)சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களின்**

(I) அரசு கட்டிடங்கள், உயர்நீதிமன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி/மாநகராட்சி/ நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு

(II)நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(III) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(IV) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(V) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(VI) பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம் 2010ன் கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(VII) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(VIII) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(IX) எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் வெளியேரும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(X) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(XI) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு:-** கணக்கெடுப்பின் போது அறியப்பட்ட எந்தவொரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4.சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு:-** எந்த ஒரு விற்பனை

மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்,

i. வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,
ii. கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.
iii. குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.
iv. சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள், அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.
v. ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,
vi. நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,
vii. நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,
viii. உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.
ix. விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக் செய்யக்கூடாது.
x. ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

5. **சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோர வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

i. விற்பனை சான்றிதழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.
ii. விற்பனை சான்றிதழ் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்பட வேண்டும்.
iii. விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்
iv. விற்பனை சான்றிதழ் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும் போது இருக்க வேண்டும்.
v. எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.
vi. உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.
vii. உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம் 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.
viii. நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்
ix. நெகிழி கழிவு மேலாண்மை விதிகள் 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்.
x. தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும்.மற்றும்

xi. இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் (தமிழ்நாடு சாலையோர நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதார பாதுகாப்பு விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் விதிகள் 2015ன்படி) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20789/2021/UPA நாள்.08.08.2025ன் படியும் நகர விற்பனைக் கூட்டம் 14.08.2025 காலை 11.30 மணியளவில் நகராட்சி அலுவகத்தில் தலைவர்/ஆணையர் நகர விற்பனைக் குழு தலைமையில் நடைபெற்று பின்வருமாறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

**கூட்ட நடவடிக்கைகள் விவரம்**

1) வியாபார பகுதி (Vending Zone), தடை செய்யப்பட்ட வியாபார பகுதி (Non Vending Zone),முதலியவை நகர வியாபாரக்குழுவில் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டு கீழ்கண்டவாறு நகர வியாபார குழுவால் பதிவு செய்யப்பட்டது

**வியாபார பகுதி VENDING ZONE**

| வ.எண் | வீதியின் பெயர் | வார்டு | சாலையின் விவரம் |
|---|---|---|---|
| 1 | மொடச்சூர் ரோடு | 22 | சியான் தியேட்டர் வரை |
| 2 | ஈரோடு ரோடு | 17,21 | சிக்னல் முதல் ஆர்ச் வரை |
| 3 | சத்தி மெயின் ரோடு | 17,21 | சிக்னல் முதல் ஆர்ச் வரை |
| 4 | அண்ணா பாலம் ரோடு | 22 | பூக்கடை முதல் சாரதா மாரியம்மன் கோவில் வீதி வரை |
| 5 | சரவணா தியேட்டர் ரோடு | 15,21 | வாய்க்கால் ரோடு சந்திப்பு முதல் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வரை |
| 6 | கபிலர் வீதி | 15 | ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் ஈரோடு ரோடு சந்திப்பு |
| 7 | பாரியூர் ரோடு | 16 | SRM கடை சந்திப்பு முதல் அரிசி ஆலை வரை |
| 8 | வாய்க்கால் ரோடு | 7,8,13 | ஆரம்ப சுகாதார நிலையம் முதல் ஸ்ரீ வித்யாலயா பள்ளி வரை |
| 9 | பழைய மருத்துவமனை ரோடு | 13,23 | வைர விழா பள்ளி முதல் இந்தியா சில்க்ஸ் துணிக்கடை வரை |

**NON VENDING ZONE**

| வ.எண் | வீதியின் பெயர் | வார்டு எண் | சாலையின் விவரம் |
|---|---|---|---|
| 1 | சத்தி ரோடு | 10,11 | சிக்னல் முதல் தமிழ்நாடு துணிக்கடை வரை |
| 2 | மொடச்சூர் ரோடு | 22 | சிக்னல் முதல் சியான் தியேட்டர் வரை |
| 3 | ஈரோடு ரோடு | 21 | சிக்னல் முதல் பாலு பெட்ரோல் பங்க் வரை |

வியாபார பகுதி (Vending Zone) வியாபார பகுதிகளில் வியாபாரம் செய்பவர்கள் மற்றும் அடையாள அட்டை இல்லாதவர்கள் சான்று கோரி நகராட்சியில் விண்ணப்பித்து வியாபார சான்று பெற்றுக் கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் சாலையோர வியாபாரிகளின் பராமரிப்பு கட்டணம் ஒரு பயனாளிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/– நகர விற்பனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேலும் கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் வியாபார பகுதி மற்றும் தடை செய்யப்பட்ட வியாபார பகுதிகள் கண்டறியப்பட்டு நகர விற்பனை குழு மற்றும் நகர விற்பனை குழு உறுப்பினர்களால் வியாபார பகுதி மற்றும் தடை செய்யப்பட்ட வியாபார பகுதிகள் முடிவு செய்யப்பட்டுள்ளது மேலும் அதற்குரிய விற்பனை கட்டணங்கள் வரிகள் மற்றும் அபராதங்கள் முடிவு செய்யப்பட்டு கீழ்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது

## அத்தியாயம்– 3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

6. **விற்பனை கட்டணம்,–**

(1) கோபிசெட்டிபாளையம் நகராட்சி சாலையோர வியாபாரிகள் விற்பனை கட்டணம் செலுத்த நகர விற்பனை குழு மற்றும் நகர விற்பனை குழு உறுப்பினர்களால் விற்பனை கட்டணம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) உப விதி (1)ன் படியான விற்பனை கட்டணம் கீழ்காணும் பட்டியலின் படியாகும்.

| வ. எண் | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் | நகர விற்பனைக் குழுவால் கூட்டத்தில் முடிவு செய்யப்ட்ட விற்பனை கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 1 சதவீதம் வருடத்திற்கு ரூ.750/– க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ.750/ |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டு மதிப்பில் 2 சதவீதம் வருடத்திற்கு ரூ.1500/– க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வழிகாட்டு மதிப்பில் 3 சதவீதம் வருடத்திற்கு ரூ.3500/– க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ.3500/– |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டுதல் மதிப்பில் 0.5 சதவீதம் வருடத்திற்கு ரூ.375/– க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ.375/ |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டுதல் மதிப்பில் 1 சதவீதம் வருடத்திற்கு ரூ.750/–க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வழிகாட்டுதல் மதிப்பில் 1.5 சதவீதம் வருடத்திற்கு ரூ.1500/– க்கு குறையாமல் | வருடத்திற்கு ரூ.1500/– |
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டர்பொருத்தப்பட்ட | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/– | வருடத்திற்கு ரூ.750/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1500/– | வருடத்திற்கு ரூ.1500/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | வண்டியுடன்) | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/- | வருடத்திற்கு ரூ.3000/- |
| 4 | நடமாடும் விற்பானையாளர் (மோட்டர் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.375/- | வருடத்திற்கு ரூ.375/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.750/- | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/- | வருடத்திற்கு ரூ.1500/- |
| 5 | நடமாடும் விற்பானையாளர் (தலை சுமை) | - | வருடத்திற்கு ரூ.250/- | வருடத்திற்கு ரூ.250/- |

3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

7. **பராமரிப்பு கட்டணம்,-**

(1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ.10/-க்கு குறையாமலும், ரூ.50/-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

**(நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்)**

**8.அபராதம்விதித்தல்:-**எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

i. விற்பனை சான்றிதழ் படி மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில் அல்லது
ii. விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ,விற்பனை சான்று மற்றும் சாலையோர ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது, மாதந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்
iii. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனையாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடை நீக்கம் செய்யப்படும் நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

**அத்தியாயம்-4**

**பலவகை**

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்தல்:-**

(1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்ள் இயக்கம் மற்றும் இது குறித்து இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தின், விற்பனை பகுதி நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றின் உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்,–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குபடுத்தல்,–**

(1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (Rechargeable Lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோகபடுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

மேற்படி சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குபடுத்துதல் சட்டம் 2014ன்படி துணை விதிகள் அறிவிக்கைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.மேற்டிபடி நகர விற்பனைக் குழு கூட்டத்தின் படி ஆண்டு வரிகள் மற்றும் பராமரிப்பு கட்டணம் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தமிழ் மற்றும் ஆங்கிலம் அறிவிக்கையினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் ஆகும் செலவு தொகையினை நகராட்சி பொது நிதியிலிந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம் **(ந.க.எண்.2188/23/எப்1)**

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு . அனுமதிக்கப்பட்டது தீர்மான எண்.1326**

( ஒம்)– என்.ஆர்.நாகராஜ்

தலைவர்

கோபிசெட்டிபாளையம்

நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்.

கோபிசெட்டிபாளையம் நகராட்சி